**யக்கலமுள்ள பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

----------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 ஜுன் 13 திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து யக்கலமுள்ள பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது விதவைகள் மற்றும் அநாதைகள் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,154,008 தொகை அந்த கணக்கிற்கு செலவு வைப்பதற்கு பதிலாக வரவு வைக்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | சபையின் கூட்ட மண்டபத்தின் நுழைவுப் பாதை மற்றும் வடிகால் முறைமை தயாரிப்பதற்காக ரூபா 4,000,000 பெறுமதியான செயற்திட்டம் ஒன்றிற்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்படாமல், அந்த தொகையை பெற வேண்டிய மூலதன உதவி என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் மீது ரூபா 5,672,584 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரியான தகவல்கள் பெற்று சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டிற்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 1,010,000 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (v) | சபையின் வங்கி நடைமுறைக் கணக்கு இடையே பணமாற்றங்கள் செய்து பேரேட்டுக் கணக்கொன்றின் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், வருட இறுதியில் உள்ளவாறு அந்தக் கணக்கு சமப்பட வேண்டி இருந்ததுடன், தொடர்ந்தும் ரூபா 63,553 இற்கான தீர்க்கப்படாத மீதியொன்று காணப்பட்டது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப் பட்டிருந்த 02 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளில் காட்டப்பட் டுள்ள மீதிகளிடையே ரூபா 240,309 இற்கான வித்தியாசம் காணப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீண்டகாலம் முதல் காணப்படும் சமமின்மைகள் என்பதால் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(i) பெற வேண்டிய கணக்குகள்** | | |
| முன்னைய ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படும் ரூபா 7,981,282 தொகைக்கான மாகாண சபை வருமான உதவி மற்றும் 2013 ஆண்டு முதல் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 81,800 இற்கான முச்சக்கர வண்டி கணக்கின் மீதி மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெற வேண்டிய தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்வேன். |

**(ii) செலுத்த வேண்டிய கணக்கு**

| | | |
|---|---|---|
| 05 வருடங்கள் மிகையான காலம் முதல் முன்கொண்டு வந்து காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 240,517 தொகைக்கான முத்திரைக் கட்டணம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அடுத்த ஆண்டு சரிசெய்து கொள்வேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி ரூபா. | இணக்கமின்மை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 570 முதல் 572 வரை | 966,075 | 02 வருடங்களை மிகைத்துள்ள 11 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) 2014 திசெம்பர் 30 ஆந் திகதிய 03/2014 அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 3(x) | 31,250 | சபையின் கடமையாற்றும் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை தொலைபேசி படி செலுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுப்பேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,061,070 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 6,397,787 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 1,398,040 | 733,698 | 750,154 | 257,050 | 1,233,040 | 652,186 | 672,184 | 279,270 |
| வாடகை | 4,715,000 | 5,555,566 | 5,556,581 | 271,000 | 4,209,100 | 4,215,427 | 4,214,527 | 119,909 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,659,000 | 2,631,307 | 1,622,307 | 1,003,250 | 1,609,000 | 989,113 | 990,613 | (4,750) |
| ஏனைய வருமானங்கள் | 64,465,000 | 34,954,519 | 37,442,557 | 7,883,048 | 62,741,000 | 37,967,146 | 36,731,869 | 15,546,683 |
| | 72,237,040 | 43,875,090 | 45,371,599 | 9,360,348 | 69,792,140 | 43,823,872 | 42,609,193 | 15,941,112 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 59,816,202 தொகை எனினும் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 45,371,600 தொகையாக காணப்பட்ட மையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 9,360,348 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பாதீட்டின் பிரகாரம் வருமானத்தை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ரூபா 1,012,968 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன், மொத்த அறவீடு ரூபா 750,154 ஆகக் காணப்பட்டமையால், வருட இறுதியில் ரூபா 257,050 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(2) இன் பிரகாரம் அதிகாரப் பிரசேத்தின் அபிவிருத்தி மட்டத்தை கவனத்தில் எடுத்து வீதவரி அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்காமையால் இந்தப் பிரதேசங் களில் சபை நிதியத்தில் இருந்து செலவு மேற்கொள்ளப்பட்டு மாதாந்தம் 45 தொன்கள் குப்பை சேகரிக்கப்படுதலும், நகர வீதிகளில் மின்சார வசதிகள் வழங்குதல் உட்பட நகர வசதிகளை வழங்கும் அலுவல்கள் பெற்றுக் கொடுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வீதவரி பிரதேசங்களை பெயரிட்டு வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் வீதவரி அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 ஏனைய வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கருவா பயிர்செய்கை செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 450,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த வருமானம் அறவீடு செய்திருக்கவில்லை. | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். | ஆண்டின் போது ரூபா 151,873 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் மீதித் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கதைத் திட்டத்தின் படி சபையினால் நிறைவேற்றுவதற்காக திட்டமிடப்பட்டிருந்த 47 செய்பணிகளில் ஒரு கருமத்திற்கு மாத்திரம் வருடாந்த பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் 46 செய்பணிகள் நிறைவேற்ற முடியாதிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி கருமங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் (out come) பெற்றிருக்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது இரண்டு செயற்திட்டங்களுக்காக மந்திரி ஏற்பாடுகளின் கீழ் ரூபா 80,000 தொகை கிடைத்திருந்த போதிலும், செயற்திட்டம் செயற்படுத்தப்படாமல் இருந்ததுடன், கிடைத்த பணம் நிர்மாண வேலைக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுக் காணப்பட்டது. | செயற்திட்டம் உரிய முறையில் நிறைவேற்றப்பட வேண்டும். | 2019 ஆண்டின் செயற்திட்டத்தை நிர்மாணிக்கும் நோக்கத்துடன் வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டது. |

**(இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சேதனப் பசளை செயற்திட்டத்திற்கு எதிராக வெளித்தரப்பினர் ஒருவரால் 2017 ஆம் ஆண்டின் போது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், வழக்கின் 10 தவணைகளுக்காக ரூபா 78,000 தொகை சபை நிதியில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை யால் 2018 ஆம் ஆண்டிற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரமும் வழங்கி இருக்கவில்லை. | முறையான நடைமுறை ஒன்றின் மூலம் குப்பை மீள்சுழற்சி செய்யப்பட்டு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டும். | எதிர்காலத்தில் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகலாவிய சுட்டிகள் மூலம் சபையின் அதிகாரப் பிரசேத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக் கான நீண்ட காலத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொது மக்களின் வாழ்க்கை நிலை உயர்த்த வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கின்றேன். |

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது சபையினால் வீதி விளக்கு பராமரிப்புக்காக மின்சார சபையுடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டிருக்காததுடன், வீதிவிளக்கு பராமரிப்புக்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 2,026,611 இற்கான தொகை செலவிடப்பட்டிருந்தது. மின்சார சபையினால் அனுமதிக்கப்பட்டிருந்த வீதி விளக்குகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட தொகையை மீளளிப்புச் செய்து கொண்டிருக்கவில்லை. | உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். | 2019 ஆண்டில் உடன்படிக்கை கைச்சாத்திடப்படும். |
| (ஆ) | கிராமிய மக்களுக்காக நூலக வசதிகள் வழங்கும் குறிக்கோளுடன் நடாத்தப்பட்டு வந்த நடமாடும் நூலகச் சேவை மீளாய்வாண்டு ஜனவரி முதல் நிறுத்தப் பட்டிருந்தது. | புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் ஆக்கபூர்வமான விடயங்களுக்கு ஈடுபடுத்த வேண்டும். | ஆக்கபூர்வமின்மையால் அந்த சேவை நிறுத்தப்பட்டது. |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இரண்டாம் பிரிவு 04 உத்தியோகத்தர்கள் ஆரம்ப பிரிவில் 04 உத்தியோகத்தர்கள் ஆக 08 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவ்வெற்றிடங்களுக்காக முறைசார் விதமாக ஆட்சேர்ப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்கள் முறைப்படி நிரப்பு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முதலமைச்சு ஊடாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | முறையான அங்கீகாரம் ஒன்று இன்றி சபையினால் சேர்க்கப்பட்டிருந்த அமைய மற்றும் பிரதியீட்டு ஊழியர் 09 பேரின் சம்பளம் மற்றும் படி செலுத்துவதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 2,617,364 தொகை மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்துடன், அந்த நியமனங்களை முறைப்படுத்துவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரதியீட்டு ஊழியர் கள் முறைப்படுத்தப் பட வேண்டும். | சபை பிரேரணை ஒன்று மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டது. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **வாகனப் பயன்பாடு** | | |
| சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த மினிடிரக்டர் ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக 2015 ஜூலை 10 ஆந் திகதிய 02/2015 இலக்கங் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சிதைவடைந்த வாகனங்களை பயன்பாட்டில் இருந்து அகற்றுவது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் சிதைவடைந்த வாகனங்களை அகற்ற வேண்டும். | எதிர்காலத்தில் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு மிகை விதிப்பாக ரூபா 136,582 செலுத்துவதற்கு நேரிட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 129,821 தொகை சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் பிரமாணம் 156(1) பிரகாரம் சபை நிதியத்திற்கு ஏற்படும் நட்டம் இந்த அறிக்கைத் திகதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்ல. | சபை நிதியத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்ய வேண்டும். | நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் படி ரூபா 160,318 இற்கான பெறுமதியுடைய நூலகப் புத்தகங்கள் 1339 குறைவாக இருந்தது. | ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்ய வேண்டும். | இணக்க சபைக்கு சமர்ப்பித்து சட்ட நடவடிக்கை எடுத்து நட்டங்களை அறவீடு செய்வேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | ஒரு வருமான விடயத்தில் ரூபா 132,000 தொகைக்கான மதிப்பீட்டு வருமானத்தில் பணம் ஏதும் உழைத்திருக்காததுடன், ஒரு செலவு விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,054,000 இற்கான தொகையில் செலவுகள் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 06 வருமான விடயங்களில் நெருங்கியிருக்காத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 36,579,514 தொகையாக இருந்ததுடன், அப் பெறுமதிகள் 37 சதவீதம் முதல் 62 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 08 செலவு விடயங்களில் கூட்டுத் தொகை ரூபா 36,433,805 தொகைக்கான சேமிப்புக்கள் காணப்பட்டதுடன், அப்பெறுமதிகள் 26 சதவீதம் முதல் 92 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பேன். |
| (ஈ) | ஒரு செலவு விடயத்தில் பாதீட்டு ஏற்பாடுகளை மிகைத்து ரூபா 178,961 தொகை எனப்படும் 36 சதவீத செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பேன். |

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2009 ஜுன் 09 ஆந் திகதிய DMA/2009(i) இலக்கங் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நியமிப்பதற்காக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் நடாத்தப்பட வேண்டும். | உத்தியோகத்தர்கள் பங்குபற்றாமையால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நடாத்த முடியவில்லை. |